கருவூலக் கணக்கு ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள்,
தமிழ்நாடு, சென்னை –35.
முன்னிலை: திரு.க.விஜயேந்திர பாண்டியன் இ.ஆ.ப.

செ.மு.ந.க.எண்.30280/2019/எம்1 நாள்.23.09.2022

| | | |
|---|---|---|
| பொருள் | பணியமைப்பு – கருவூலம் மற்றும் கணக்குத் துறை – சென்னை ஓரலகு – கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.சி.பிரசாத், இளநிலை உதவியாளர், சம்பளக் கணக்கு அலுவலகம் (தெற்கு), சென்னை – பணிவரன்முறை ஆணை வழங்கல் | |
| பார்வை | 1 | அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்த (எம்) துறை, நாள்.01.08.2018 |
| | 2 | அரசாணை (நிலை) எண்.18, தொ.(ம).வே.வா.(கியூ1)த் துறை, நாள்.2.01.2020 |
| | 3 | கருவூலக் கணக்கு கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்), சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.30280/2019/எம்1 நாள்.26.02.2021 |
| | 4 | கருவூலக் கணக்கு கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்), சென்னை அவர்களின் கடித ந.க.எண்.30280/2019/எம்1 நாள்.15.12.2021 மற்றும் 11.05.2022 |
| | 5 | அரசாணை (3ப) எண்.13 நிதி (க.க.2)த் துறை, நாள்.29.08.2022 |

சம்பளம் மற்றும் கணக்கு அலுவலகம் சென்னை-35
02 NOV 2022

********

ஆணை:

கருவூலம் மற்றும் கணக்குத் துறை, சென்னை ஓரலகில் சம்பளக் கணக்கு அலுவலகம் (தெற்கு), சென்னையில் பதிவுரு உதவியாளராக பணிபுரிந்த திரு.S.சிவஞானம் அவர்கள் 25.03.2018 அன்று பணியிலிருக்கும் போது பணியிடை மரணமடைந்ததை தொடர்ந்து, அவரது வாரிசுதாரரான மகன் திரு.சி.பிரசாத் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கிடுமாறு விண்ணப்பித்ததைத் தொடர்ந்து அவரது கல்வித் தகுதியின் அடிப்படையில் கருவூலக் கணக்கு கூடுதல் இயக்குநர்(நிர்வாகம்), சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்து உத்தரவிடப்பட்டு தனியர் சம்பளக் கணக்கு அலுவலகம் (தெற்கு), சென்னையில் 03.03.2021 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்வது தொடர்பாக, பார்வை 1–இல் காணும் அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்த (எம்) துறை, நாள்.01.08.2018–ல் கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவர்களின் பணியை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினை பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு.சி.பிரசாத் (காலஞ்சென்ற திரு.S.சிவஞானம், பதிவுரு உதவியாளர், சம்பளக் கணக்கு அலுவலகம் (தெற்கு), சென்னை என்பவரின் வாரிசுதாரரான மகன் திரு.சி.பிரசாத் கருணை அடிப்படையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016–ல்

பிரிவு 17–ன் உட்பிரிவு–1 ன் படி தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டார். மேலும் அச்செயல்முறை ஆணையின்படி தனியர், கருவூல மற்றும் கணக்குத் துறை, சென்னை ஓரலகில் சம்பளக் கணக்கு அலுவலகம் (தெற்கு), சென்னையில் இளநிலை உதவியாளராக 03.03.2021 முற்பகல் முதல் தற்காலிகமாக பணிபுரிந்து வருகிறார் எனவும்

பார்வை 5–இல் குறிப்பிட்டுள்ள அரசாணையில் வழங்கியுள்ள ஆணைகளின் படி, கருவூலக் கணக்கு துறையில் சென்னை ஓரலகில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு, இளநிலை உதவியாளர் பணியிடத்தில் ஓராண்டிற்கு மேலாக பணிபுரிந்து வரும் திரு.சி.பிரசாத், இளநிலை உதவியாளர் என்பவரின் தற்காலிகப் பணிநியமனம் அப்பதவியில் திருப்தி அளிக்கும்படியாக உள்ளதாலும், இப்பதவிற்குரிய மற்றும் கருணை அடிப்படையிலான நியமனத்திற்குரிய அனைத்துத் தகுதிகளையும் தனியர் நிறைவு செய்துள்ளதாலும், திரு.சி.பிரசாத், இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016–ல் பிரிவு 28–ன் உட்பிரிவு (1)–ன் படி தனியர் பணியேற்ற நாளான 03.03.2021 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும், தனியர் பொருட்டு தமிழ்நாடு கருவூலக் கணக்குத் துறை பணிவிதிகளின் படி அன்னாருக்கு தகுதிகாண்பருவம் துவங்குதல் மற்றும் வரையறுக்கப்பட்ட தேர்வுகள் மற்றும் பயிற்சிகள் ஏதுமிருப்பின் அதனை நிறைவு செய்ய வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது. தகுதிகாண்பருவம் துவங்கப்பட்டு மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தினராக கருதப்படுவார் எனவும் ஆணையிடப்படுகிறது. மேலும் தனியரின் பணிவரன்முறை குறித்து அன்னாரின் பணிப்பதிவேட்டில் பதிவுகள் உரிய அலுவலர் அவர்களால் மேற்கொள்ளப்படவேண்டும்.

ஒம்/– க.விஜயேந்திர பாண்டியன்
கருவூலக் கணக்கு ஆணையர்

பெறுநர்:

1. திரு.சி.பிரசாத், இளநிலை உதவியாளர்,
   சம்பளக் கணக்கு அலுவலகம் (தெற்கு),
   சென்னை
   (உரிய வழிமுறையாக)
2. சம்பளக் கணக்கு அலுவலர்,
   சம்பளக் கணக்கு அலுவலகம் (தெற்கு),
   சென்னை.
3. இருப்புக் கோப்பு // உதிரி

// ஆணைப்படி அனுப்பலாகிறது //

முதுநிலை கண்காணிப்பாளர்

மே.கு.நக.எண். 8495/2018/அ3

நாள் : 04.11.2022

சம்பள கணக்கு அலுவலகம் (தெற்கு),
சென்னை-35.

||| சார்பு செய்யப்படுகிறது |||

சம்பளம் மற்றும் கணக்கு அலுவலா
சம்பளம (ம) கணக்கு அலுவலகம் (தெற்கு)
சென்னை-600 035

ஒ.த
04.11.2022

பெறுநர் :

திரு. சி. பிரசாத்,
இளநிலை உதவியாளர்,
சகஅ(தெ), சென்னை-35.